# தொடக்கப் பள்ளி இறுதித் தேர்வு (2017)
# அடிப்படைத் தமிழ் (0027)

## 1. மதிப்பீட்டின் நோக்கங்கள்

தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வில் அடிப்படைத் தமிழ்ப் பாடத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

1.1 கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழி மற்றும் எழுத்துவழி அமைந்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை மாணவர்கள் எந்த அளவிற்கு அடைந்திருக்கிறார்கள் என்பதை அறிவது.

1.2 தொடக்கநிலை தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2008-இல் குறிக்கப்பட்டுள்ள கற்றல் விளைவுகளை எந்த அளவிற்கு மாணவர்கள் அடைந்திருக்கிறார்கள் என்பதை மதிப்பீடு செய்வது.

## 2. தேர்வு அமைப்புமுறை

தொடக்கப் பள்ளி இறுதித் தேர்வு அடிப்படைத் தமிழ் வினாத்தாள்கள் பின்வருமாறு அமையும்.

**<u>வினாத்தாள் 1</u>: (15 மதிப்பெண்கள், 15%)**

இத்தாள் ‘அ’, ‘ஆ’, ‘இ’ என்னும் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது.

**‘அ’ பிரிவு : மொழிப் பயன்பாடு**

இப்பிரிவில் ஐந்து தெரிவுவிடை வினாக்கள் இடம்பெறும். ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று தெரிவுகள் வழங்கப்படும். அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் வேண்டும்.

**‘ஆ’ பிரிவு : வாசிப்புக் கருத்தறிதல்**

இப்பிரிவில் ஒரு பனுவலையொட்டி இரண்டு தெரிவுவிடை வினாக்கள் இடம்பெறும். ஒவ்வொரு வினாவுக்கும் மூன்று தெரிவுகள் வழங்கப்படும். அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் வேண்டும்.

**‘இ’ பிரிவு : நடைமுறை சார்ந்த பனுவல்**

இப்பிரிவில் ஒரு படவிளக்கக் கருத்தறிதல் பனுவல் இடம்பெறும். இதனையொட்டி மூன்று வினாக்கள் இடம்பெறும். முதலாவது வினா, தெரிவுவிடை வினா. இதற்கு மூன்று தெரிவுகள் வழங்கப்படும். அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுதல் வேண்டும். ஏனைய இரண்டும் சுயவிடை வினாக்கள். சரியான சொல்லையோ சொற்றொடரையோ கொண்டு இரண்டு கோடிட்ட இடங்களையும் நிரப்புதல் வேண்டும்.

**<u>வினாத்தாள் 2</u>: (55 மதிப்பெண்கள், 55%)**

இத்தேர்வு கீழ்க்காணும் இரண்டு கூறுகளை உள்ளடக்கியது:
1. வாய்விட்டு வாசித்தல்
2. உரையாடல்

**1. வாய்விட்டு வாசித்தல் (15 மதிப்பெண்கள், 15%)**

கணினித் திரையில் இடம்பெறும் ஓர் உரைநடைப் பகுதியை மாணவர் வாய்விட்டு வாசிக்க வேண்டும். உச்சரிப்பு, சொல்லழுத்தம், சரளம், ஓசை நயம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**2. உரையாடல் (40 மதிப்பெண்கள், 40%)**

கொடுக்கப்படும் ஒளிக்காட்சியைப் பயன்படுத்தித் தேர்வில் கலந்துகொள்வோர் அதனைப் பற்றி விவரித்துத் தேர்வாளரோடு உரையாட வேண்டும். அந்த ஒளிக்காட்சி ஏறக்குறைய 50-55 வினாடிகளுக்குள் அமைந்திருக்கும். ஒளிக்காட்சியைப் பற்றிய வருணனை ஓரிரு வாக்கியங்களில் அமைந்திருக்கும். கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளை விவரிக்கும் திறன், உரையாடலில் சரளம், மொழியின் பொருத்தம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

**வினாத்தாள் 3: கேட்டல் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள், 30%)**

செய்தி, உரையாடல், சிற்றுரை. கதை, அறிக்கை, விளம்பரம், அறிவிப்பு, சரியான படத்தைத் தேர்ந்தெடுத்தல் போன்ற தலைப்புகளில் வினாக்கள் இடம்பெறும். கேட்டல் கருத்தறிதல் தேர்வு குறும்பனுவல் வினாக்களையும் எதிருரை வினாக்களையும் உள்ளடக்கியிருக்கும். ஒரே தேர்வில் இத்தலைப்புகள் அனைத்தும் இடம்பெற வேண்டும் என்கின்ற அவசியம் இல்லை. பனுவல்களையும் வினாக்களையும் செவிமடுத்த பின்னர் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். கேட்டல் கருத்தறிதல் தேர்வுக்குரிய நேரம் ஏறக்குறைய 35 நிமிடங்கள்.

## 3. தேர்வு விவர அட்டவணை

### தொடக்கப் பள்ளி இறுதித் தேர்வு
### அடிப்படைத் தமிழ்

| **தாள் (நேரம்)** | **பொருளடக்கம்** | **வினா வகை** | **வினாக்களின் எண்ணிக்கை** | **மதிப்பெண் (மதிப்பளவு)** |
|---|---|---|---|---|
| 1 | **<u>‘அ’ பிரிவு</u>** | | | (15%) |
| (40 நிமிடங்கள்) | மொழிப் பயன்பாடு | தெரிவுவிடை | 5 | 5(5%) |
| | **<u>‘ஆ’ பிரிவு</u>** | | | |
| | வாசிப்புக் கருத்தறிதல் | தெரிவுவிடை | 2 | 4(4%) |
| | **<u>‘இ’ பிரிவு</u>** | | | |
| | நடைமுறை சார்ந்த பனுவல் | | | |
| | (அ) தெரிவுவிடை வினா | தெரிவுவிடை | 1 | 2(2%) |
| | (ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புதல் | சுயவிடை | 2 | 4(4%) |
| 2 | **<u>வாய்மொழி</u>** | | | (55%) |
| (ஏறக்குறைய 10 நிமிடங்கள்) | 1. வாய்விட்டு வாசித்தல் | சுயவிடை | 1 | 15(15%) |
| | 2. உரையாடல் (ஒளிக்காட்சியை ஒட்டி அமைதல்) | சுயவிடை | 1 | 40(40%) |
| 3 (ஏறக்குறைய 35 நிமிடங்கள்) | **<u>கேட்டல் கருத்தறிதல்</u>** | தெரிவுவிடை | 15 | 30(30%) |